செ.வெ.எண்:87 நாள்:26.11.2025

# பத்திரிக்கைச் செய்தி

## அங்கன்வாடி உதவியாளர் நேரடி பணிநியமனம்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டாரத்தின் கீழ் செயல்படும் நாகம்பந்தல் காலனி குழந்தை மையத்தில் காலியாக உள்ள ஒரு அங்கன்வாடி உதவியாளர் பணியிடம் அமிலவீச்சால் பாதிக்கப்பட்டவர்கள், தொழுநோயிலிருந்து குணமடைந்தவர்கள் (Leprosy- 40% No Deformity in upper limbs with intact sensory and motor components) மற்றும் குள்ளத்தன்மை ஆகிய மாற்றுத்திறனாளி வகையினருக்கு இடஒதுக்கீடு செய்யப்பட்டு நேரடி பணிநியமனத்திற்கு மறுஅறிவிப்பு வெளியிடப்படுகிறது. விண்ணப்பங்களை www.icds.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இப்பணிகளுக்கென **08.12.2025 ஆம் தேதி மாலை 5.45 மணிக்குள்** அரசு வேலை நாட்களில் விண்ணப்பிக்க வேண்டும்.

**தொகுப்பூதிய விவரம்:**

தொகுப்பூதியத்தில் பணிநியமனம் செய்யப்படும் அங்கன்வாடி உதவியாளருக்கு ரூ.4100−ம் மாதமொன்றுக்கு வழங்கப்படும். பன்னிரெண்டு மாத காலம் தொடர்ந்து பணியினை முடித்த பின், சிறப்பு காலமுறை ஊதியத்தின் கீழ் அங்கன்வாடி உதவியாளருக்கு ரூ.4100 − 12500 என்ற விகிதத்தில் மாதமொன்றுக்கு வழங்கப்படும்.

**தகுதிகள்:**

இப்பணியிடங்களுக்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். அங்கன்வாடி உதவியாளர் பணிக்கு 10 ஆம் வகுப்பு தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும். தமிழ் சரளமாக எழுதப் படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

அங்கன்வாடி உதவியாளருக்கான வயது வரம்பு 01.04.2025 அன்று படி 20 வயது முடிந்து 40 வயதுக்கு மிகாமலும் விதவைகள் / ஆதரவற்ற பெண்கள்/ எஸ்சி / எஸ்டி வகுப்பினருக்கு அதிகபட்சமாக 45 வயது வரையிலும், மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகபட்சமாக 43 வயது வரையிலும் இருக்க வேண்டும்.

**விண்ணப்பதாரர் அறிவிக்கப்பட்டுள்ள கிராமத்திலுள்ள** குழந்தைகள் மையம் அமைந்துள்ள அதே கிராமத்தை சேர்ந்தவர். அதே கிராம ஊராட்சிக்குட்பட்ட பிற கிராமத்தை சேர்ந்தவர். அந்த கிராம ஊராட்சி எல்லையின் அருகிலுள்ள அடுத்த கிராம ஊராட்சியை சேர்ந்தவராக இருத்தல் வேண்டும். **விண்ணப்பதாரர் அறிவிக்கப்பட்டுள்ள மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சியிலுள்ள** குழந்தைகள் மையம் அமைந்துள்ள அதே வார்டு (அ) அருகிலுள்ள வார்டு (அ) மைய அமைந்துள்ள வார்டின் எல்லையை பகிர்ந்துக் கொள்ளும் வார்டைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் போது உரிய விண்ணப்பத்தினை பூர்த்திசெய்து காலிப்பணியிட குழந்தை மையம் அமைந்துள்ள வட்டாரம் / திட்டம் (Block/ Project) **குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்தில் மட்டுமே சமர்பிக்க வேண்டும்.** விண்ணப்பத்துடன் பள்ளி மாற்றுச்சான்றிதழ், 10ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், குடும்ப அட்டை / ஆதார் அட்டை, சாதிச்சான்று, வாக்காளர் அடையாள அட்டை ஆகிய சான்றிதழ்களின் சுயசான்றொப்பமிட்டு (Self attested) நகல்கள் இணைக்கப்பட வேண்டும். விதவை, கணவரால் கை விடப்பட்டோர், ஆதரவற்ற பெண் (தாய் / தந்தை இறப்பு சான்று) மற்றும் மாற்றுத்திறனாளிகள் அதற்கான சான்றிதழ்களின் நகல்களையும் சுயசான்றொப்பமிட்டு (Self attested) இணைக்க வேண்டும் . நேர்காணலின் போது அசல் சான்றிதழ்களுடன் கலந்து கொள்ள வேண்டும் **என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பொ.இரத்தினசாமி, இ.ஆ.ப., அவர்கள்** தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**